**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.No.282/2023**

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 03 ஆம் நாள் வியாழன் கிழமை
எ.ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | இராமலிங்கம் | த/பெ.: | சுப்பிரமணியன் |
| கிராமம்: | ஆலத்தம்பாடி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | விவசாயம் |
| வயது: | 36 | முகவரி: | ஆலத்தம்பாடி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 03.07.2025.

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் 2–ம் எதிர்மனுதாரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. ஆண்டு பட்டிகை வழக்கு எண். 03/2016 என்ற வழக்கில் திருத்துறைப்பூண்டி நீதித்துறை நடுவர் அவர்கள் வழங்கிய தீர்ப்புரையின் கணினி நகல் **எ.ம.சா.ஆ.1** ஆகும். மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் பட்டதாரி படித்துள்ளேன். விவசாய வேலை செய்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன் என்றும், இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து என்பது வேளூர் புலிய மரத்தடியில் நடைபெற்றது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.1 -ல் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் TN 51 E 3915 என்ற வாகனத்தை இயக்கியவரின் பெயர் இராமலிங்கம், த/பெ. சுப்பிரமணியன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் உரிமையாளர் பெயர் தனபால் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் திருத்துறைப்பூண்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் வழக்கு எண்.03/2016 மனுதாரர் குடிபோதையில் வாகனத்தை ஓட்டினார் என்பதற்கு தடய அறிவியல் துறையிலிருந்து எந்த அறிக்கையும் வாங்கி புலன் விசாரணை அதிகாரி அந்த குற்ற வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மனுதாரரின் கணவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. நான் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாக, ஹாரன் அடிக்காமல் மேற்படி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் மனுதாரரின் கணவர் குடிபோதையில் குடித்து விட்டு வாகனத்தை இயக்கியதால் விபத்து ஏற்பட்டது என்றால் அது சம்பந்தமாக நான் தடயவியல் துறை அறிக்கையில் மனுதாரரின் கணவர் குடிபோதையில் தான் சென்றார் என்று ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரர் விபத்து சமயம் அவரது கணவரின் இருசக்கர வாகனத்தில் பின் அமர்ந்து சென்றார் என்றும், வழக்கிற்காக அவ்வாறு அமர்ந்து செல்லவில்லை என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி மனுதாரர் விபத்து சமயம் பாதிக்கப்பட்டதின் அடிப்படையில் 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டுள்ளார் மனுதாருக்கு வலது தோல்பட்டையில் அடிபட்ட எலும்பு முறிந்தும், இடது புற கண்புருவமும் காயம்பட்டுள்ளது. அதேபோல் பற்கள் உடைந்து கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபத்து எனது கவனக்குறைவினால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் வாகனத்தை ஓட்டி வந்தபோது தலைக்கவசம் அணிந்து வந்தேன். நான் தலைக்கவசம் அணிந்து வந்தேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கையில் நான் தலைக்கவசம் அணிந்து வந்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த நாளில் நான் இடது புறம்

ஆக சென்றேன் என்பது குறித்து முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக உண்மை சம்பவங்களை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சாட்சி மீண்டும் நான் மயக்க நிலையில் இல்லை என சாட்சியம் அளிக்கிறார். மனுதாரரின் கணவர் இறந்த பிறகு மனுதாரரின் கணவர் தம்பியை திருமணம் செய்து விட்டபடியால் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க முடியாது என நான் சொல்ல உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன மனுதாரரின் கணவர் அய்யப்பன் கோவிலுக்கு மாலை போடுவதற்காக பூஜை ஜாமான்கள் வாங்க செல்லும்போது தான் விபத்து ஏற்பட்டது என்றும், அவர் மது அருந்தவில்லை என்றும், இறந்து போன நபர் கோவிலுக்கு செல்லும் வரையில் இந்து பழக்க வழக்கங்களின் படி மது அருந்தும் பழக்கம் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரருக்கு இழப்பீடு தொகை கொடுக்க 4-ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் தான் கடமைப்பட்டவர் என்றும், நான் நஷ்ட ஈடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் மனுதாரருக்கு இழப்பீடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கு மனுவில் கோரியபடி நஷ்ட ஈடு தொகை கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:– இல்லை</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.